# காந்தீயம்

எனது வாழ்க்கையே எனது செய்தி

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் இரு திங்கள் வெளியீடு

Publication of All Ceylon Gandhi Seva Sangam

Reg. No. S.159 of 25-8-1965

மலர் – 24 இதழ் – 01 ஒக்டோபர் – நவம்பர், 2008 விலை ரூபா 10/-

## மகாத்மாவே வாழி

ஒவ்வொரு வரும் வாழ்வில் உயர் சமநிலை
ஒவ்வுதல் வேண்டும் என ஓர்ந் துணர்ந்து
செவ்வே புத்துலகைச் சிருட்டித் தாங்கே
செங்கோல் நிறுவ வந்த செம்மலேவாழி

பொருள் தேடலில் தன் நலமொடு பிறர் நலம்
பாதிப் படையாமற் பாதுகாப் பருளி
விருப்புடன் பிறர்க்குதவி வழங்கிப் பின்தான்
வேண்டியதை ஈட்டக் கற்பித்த வித்தகாவாழி

உண்டியுடை உறையுள் தருவது உழைப்பு
இவையா வற்றிற்கும் மேலாக இனிய நற்
பண்புகளைப் பெறுதற்கும் பாத்திய மாவதெனப்
பரக்க மொழிந்த பகுத்தறி வாளனே வாழி

பிறநாட்டு உற்பத்தியைப் புறந் தள்ளியே
பெருந்தொகை ஊழியரைப் பணிக் கமர்த்தித்
திறஞ்சார் பொருள் உற்பவித்து வேலையிலாத்
திண்டாத் டத்தைத் தீர்த்த தீரனே வாழி

அருணெறி பிறழா அரசவழி ஒன்றிற்கே
ஆள்சக்தி யுண்டு அவனியில் உள்ளோரை
மருணீக் கியஇக் கருத்தோ வியத்தால்
மெய்ந்நெறி காண்பித்த மகாத்மா வேவாழி

**மணிமன்றன்**
யாழ்ப்பாணம்

(அக்ரோபர் 2 அடிகளாரின் 139வது பிறந்த தின நினைவாக இக்கவிதை பிரசுரிக்கப்படுகிறது)

## காந்திய சிந்தனையாளர்

**மு.மாரியப்பன் 70**



மதுரை சர்வோதய இலக்கியப் பண்ணையின் தலைவரும், காந்திய சிந்தனையாளருமான மு.மாரியப்பன் அவர்களின் 70 வது பிறந்த நாள் விழாக் கூட்டம் மதுரை, மேலூர் சாலையிலுள்ள மடீட்சியா மண்டபத்தில் ஆகஸ்ட் 30ம் திகதி அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு காந்தி நினைவு நிதி அமைப்பின் தலைவர் க.மு.நடராஜன் அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து விழா மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது. அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம் வெளியிட்டு வைக்க முதல் மலரை அருப்புக்கோட்டை இராமலிங்கா மில்ஸ் நிர்வாக இயக்குநர் டி.ஆர்.தினகரன் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து வாழ்த்துரைகளை டாக்டர் கௌசல்யாதேவி (நிர்வாக அறங்காவலர், காந்தி கிராமம்), வி.எஸ்.இராமலிங்கம் (வழக்கறிஞர், காந்திய இயக்கம், தஞ்சாவூர்), கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் (உழவனின் நில உரிமை இயக்கம், காந்தி கிராமம்) முனைவர் மா.பா.குருசாமி (குமரப்பா ஆராய்ச்சி நிறுவனம், திண்டுக்கல்)மா.பாதமுத்து (செயலர், கீதைப் பேருரைகள் பவள விழாக்குழு) டி.சீனிவாசராகவன் (மூத்த வழக்கறிஞர்) ஆகியோர் வழங்கினர்.

மு.மாரியப்பனின் ஏற்புரையைத் தொடர்ந்து தமிழ்நாடு காந்தி நினைவு நிதியின் செயலாளர் இ.முருகேசன் நன்றியுரை கூறினார்.

முனைவர் மு.மாரியப்பன் அவர்களின் காந்தியப்பணிகள் மென்மேலும் சிறப்புற அகில இலங்கை காந்தி சேவா சங்கம் தனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.

## அஹிம்சை தினம்



மகாத்மா காந்தியடிகளின் 139 ஆவது ஜயந்தி தினம் அக்டோபர் 2 உலகளாவிய ரீதியில் அஹிம்சை தினமாகக் கொண்டாடப்படுகிறது.

## உள்ளே.....

- காந்தி மாஸ்டரின் விசேட பேட்டி கட்டுரைகள்
- இலங்கைத் தீவுக்கோர் காந்தியப் பாலம்
- போர் அர்த்தமற்றது போர் மூலம் சத்தியம் தலை தூக்காது
- ஈழத்துக் காந்தி சா.யே.வே.செல்வநாயகம்
- காந்தீயம் பொது அறிவுக்களம் போட்டி முடிவு
- நினைவுப் பகிர்வு - மில்க்வைற் கனகராசா

*கடமையைச் சரிவரச் செய்யுங்கள்*

# நினைவுப்பகிர்வு – மில்க்வைற் கனகராசா


மில்க்வைற் கனகராசா அவர்களின் 81 ஆவது பிறந்த தின நினைவு தினம் நவம்பர் 2 ஆகும். அன்னாரின் தொழிலகத்தில் விற்பனைப் பிரதிநிதியாக 20 வருட காலம் பணியாற்றிய உடையார்கட்டு முல்லைத்தீவைச் சேர்ந்த அகில இலங்கை சமாதான நீதிவான் சி.பொன்னையா அவர்கள் சிவதர்மவள்ளல் க.கனகராசா பற்றிய தனது நினைவலைகளை “காந்தீயம்” வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

மகாத்மா காந்தி அடிகளின் 60வது சிரார்த்த தினம் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தால் அனுஷ்டிக்கப்பட்ட போது யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அடிகளாரின் உருவச் சிலைக்கு சிவநேயர் இ.தவகோபால் மலர் மாலை அணிவிக்கும் நிழற் படத்தைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

சிவதர்மவள்ளல் அமரர்.க.கனகராசா (மில்க்வைற் சோப் தொழிலதிபர்) அவர்கள் எதிர்கால சந்ததிகளுக்காக யாழ் ஆஸ்பத்திரி வீதியில் அன்று காந்தி சிலையை உருவாக்கி வைத்தார். இன்று அவர் இறைவனடி சேர்ந்தாலும் அவருடைய நினைவாக மகாத்மா காந்தி அவர்களின் 60 வது சிரார்த்த தினத்தில் அவரின் குடும்ப அங்கத்தவரான பெறாமகன் சபை உறுப்பினர் சிவநேயர் திரு.இ.தவகோபால் அவர்களால் மகாத்மா காந்தி சிலைக்கு மலர் மாலை அணிவிப்பது பொருத்தமான ஒன்றே. அமரரின் மறைவுக்குப் பின் அவரின் சேவைகள் தொடர்வதை இட்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

சிவதர்மவள்ளல் அமரர். க.கனகராசா அவர்கள் தமிழ் கூறும் நல்லுலகிற்கு அவர் வாழ்ந்த காலத்தில் யாழ் நகரத்தில் மகான்களின் உருவச்சிலைகளை அமைத்தார். குறிப்பாக ஔவையார், திருவள்ளுவர், காந்தி போன்றவர்களின் உருவச்சிலைகள் அடங்கும். முன்னர் மேற்படி சிலைகள் வெறியர்களால் அடித்து நொருக்கப்பட்டது. மனம் தளராது அச்சிலைகளை புனரமைப்பு செய்து பாதுகாத்து வைத்துச் சென்றுள்ளார்.

நான் 2 தசாப்தகாலம் அவரின் விற்பனை பிரதிநிதியாக பணியாற்றி உள்ளேன். அக்காலப்பகுதியில் திருவள்ளுவர், மகாத்மாகாந்தி ஆகிய பெரியவர்களின் திருவுருவங்களை நாட்காட்டிகளாக (மாதக்கலண்டர்) அச்சிட்டு மில்க்வைற் அன்பளிப்பாக நாடு பூராவிலும் உள்ள வர்த்தக நிலையங்கள், கூட்டுறவு நிலையங்கள், ஆலயங்கள், தர்மஸ்தாபனங்கள் அனைத்திற்கும் இன மத வேறுபாடு இன்றி வழங்கச் செய்து துணிவுடன் செயற்பட்டவர். வேற்று இன மதத்தவர்களுக்கு அன்பளிப்பு மேற்படி தினக்காட்டிகளை நாங்கள் சென்று வழங்கத் தயக்கம் காட்டிய போது ஏற்றுக் கொள்வார்கள் என உற்சாகம் காட்டி நாடு பூராகவும் மகாத்மாகாந்தி, திருவள்ளுவர் ஆகியோரின் உருவம் பொறித்த தினக்காட்டிகளை ஆயிரக்கணக்கில் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டு வழங்கச் செய்த துணிச்சல் மிக்க செயல் வீரர்.



அதுமட்டுமல்ல நவராத்திரி காலங்களில் பனை ஓலை ஏடுகளை அச்சிட்டு பாலர்களின் ஏடு (கல்வி) துவங்க வழி ஏற்படுத்துவார். சமயம், அறிவு, மகான்களின் பொன்மொழிகளை ஆயிரக்கணக்கில் அச்சிட்டு நாடு பூராகவும் எங்கள் ஊடாக தனது விற்பனை வாகனத்தில் அனுப்பி வழங்கச் செய்தவர்.

அன்னார் மறைந்தாலும் அவர் ஆற்றிய சேவைகளுக்காக அவரின் பெயர் சரித்திரத்தில் இடம் பிடிக்கும் என்பதை இன்று காணக்கூடியதாக கேட்கக் கூடியதாக இருக்கின்றது. அவரின் இச்சேவை அழியாமல் அதனைப் பின்பற்றி செயற்படுத்திவரும் சிவநேயர் தவகோபால் அவர்களுக்கு என் வாழ்த்துக்கள்.

நவம்பர் 2 அமரர் தொழிலதிபர் அவர்களின் பிறந்த நாளாகும். அன்று பணியாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி தினமாகும். தனது பிறந்த நாளைக் கொண்டாடுவதுடன் தனது தொழிலை மேம்படுத்தும் பணியாளர்களையும் மறக்காமல் பணியாளர்களுக்கு லாப போனஸ் வழங்கி மகிழ்வித்தவர். தானும் மகிழ்ந்து தனது பிறந்த நாளைக் கொண்டாடுவதுடன் தனது உயர்ச்சிக்காகக் கைகொடுத்த ஊழியர்களையும் அன்றைய தினத்தில் கௌரவித்த தொழிலதிபராவார்.

பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு நல்லூர் குருமுதல்வர் நல்லை ஆதீனம், சிவத்தமிழ்ச் செல்வி மறைந்த அமரர்.தங்கம்மா அப்பாக்குட்டி, அறிஞர் குலரத்தினம் ஐயா ஆகிய சமயப் பெரியவர்களை மறவாமல் அழைத்து ஆசி பெறுவார். கனகராசா அவர்களின் ஆக்கங்களை வெளியிட உறுதுணையாக இருந்து வெளியீடுகளை வெளியிட்டு உதவி வந்த திரு.குலரத்தினம்ஐயா (மில்க்வைற் செய்தி ஆசிரியர்) மற்றும் பிறந்த நாளுக்கு வந்து அவரை வாழ்த்தி ஆசி கூறியவரும் கனகம் என்றால் தங்கம் என்று புகழுரை கூறிய சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் தொழிலதிபர் க.கனகராசா அவர்களும் இன்று நம்மிடையே இல்லாது போனாலும் அவர்கள் விட்டுச் சென்ற அரும்பெரும் பணிகள் அவர்களை நம்மிடையே நினைவு கூர்ந்து நிற்கிறது.

சி.பொன்னையா J.P
உடையார்கட்டு
முல்லைத்தீவு.

## படிப்பினை

எத்தனை தான் கடிதங்கள் வந்திட்டாலும்
காந்தியைப் போல் சலிப்பின்றி எல்லோருக்கும்
நித்த நித்தம் தவறாத கடமையாக
நிச்சயமாய் பதில் எழுதும் நியமம் வேண்டும்
புத்தி கெட்ட கேள்வி சிலர் கேட்டிட்டாலும்
பொறுத்து விடை காந்தியைப் போல் புகலவேண்டும்
பத்தியம் போல் பதட்டமுள்ள பாஷை நீக்கி
பரிவாகப் பணி மொழிகள் பதிக்க வேண்டும்.

(தொடரும்)

(நாமக்கல் கவிஞர் அவர்களின் "காந்தி அஞ்சலி" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பெற்றது)

எனது வாழ்க்கையே எனது செய்தி

# காந்தீயம்

காந்தி ஆண்டு 140, ஒக்டோபர்-நவம்பர் - 2008

## ஜன சக்தியைக் கட்டியெழுப்புவோம்

மக்கள் சக்தி மாபெரும் சக்தி என்பார்கள். சமூக அநீதி மற்றும் அடக்கு முறைகளுக்கு எதிராக உண்மையான சமுதாயப்பற்றுடன் மக்கள் எழுச்சி கொள்வார்களாயின் எந்த வல்லரசும் மக்கள் அணியின் முன்னால் மண்டியிட வேண்டியிருக்கும் என்பது எமக்கு வரலாறு கற்றுத் தரும் பாடமாகும். இந்த மக்கள் எழுச்சியின் வெற்றிக்கு ஒவ்வொரு தனிமனிதனதும் உணர்வும் செயற்பாடும் இன்றியமையாதனவாகும். சரியான வழியில் சிந்திக்கக் கூடிய தலைமைத்துவத்தின் வழிகாட்டலில் மக்கள் எழுச்சியடையும் போதுஆயுதப் பிரயோகம் செய்வோர் அடிபணிய வேண்டிய நிலை உருவாகும்.

இன்று மோதல் அல்லது யுத்தம் நடைபெறும் நாடுகளில் மக்கள் சக்தி அல்லது ஜனசக்தி உறங்கிக் கொண்டிருக்கிறது. இதனால் இத்தேசங்களில் இருள் சூழ்ந்துள்ளது. மக்கள் தன்னம்பிக்கையை இழந்து கொண்டிருக்கிறார்கள். இதனால் அழிவு சக்திகளின் தாண்டவக்கூத்து இரவு பகலாகத் தொடர்கிறது. நாட்டுக்கு விடிவையும் ஒளியையும் தரவல்லது ஜனசக்தி ஒன்றே என்பதை மக்கள் உணரும் வரை நிலைமை இவ்வாறாகத் தான் இருக்கும்.

இந்த ஜனசக்தியைக் கட்டியெழுப்புவதற்கு கருத்துப் புரட்சியும் மனமாற்றமும் முக்கியமானவையாகும். "தனி மனிதனின் மனமாற்றமே பிரபஞ்ச மாற்றத்தின் துவக்கம்" என்று ஸ்ரீ அம்மா பகவான் கூறுகின்றார்கள். சுயநல எண்ணங்களுடன் நித்தியம் வாழ்வில் போராடும் ஒரு சாமானிய மனிதனில் இருந்து, பிரபஞ்ச அமைதிக்காக இரவு பகலாகப் பாடுபடும் ஒரு மாமனிதன் வரை அனைவரும் உலகம் மாற வேண்டும் என்று விரும்புபவர்களே. உலகம் மாற வேண்டும் என்றால் எமது குடும்பங்களில் மாற்றம் ஏற்பட வேண்டும். குடும்பங்களில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்றால் ஒவ்வொரு தனிமனிதனும் மாற வேண்டும் என்பது அவர்களின் விளக்கமாக உள்ளது. நல்ல உணர்வுகளும் நல்ல செயல்களுமே உயர்ந்த சமுதாயத்தை உருவாக்குவதற்கு மூலமாக இருக்கின்றன என்பது அடிப்படையான கருத்தாகும். இந்த மாற்றம் சமூக, பொருளாதார, அரசியல் தளங்களில் தாக்கம் செலுத்தும். ஒரு தேசத்தின் அரசியல் ஒவ்வொரு தனிமனிதனதும் வாழ்விலும் ஏதாவது ஒரு வகையில் செல்வாக்குச் செலுத்தக் கூடிய காரணியாக இருக்கின்றது. அரசியல் அரசியல் கொள்கைகள் ஒவ்வொரு தனிநபரினதும் சமூக, பொருளாதார, வாழ்வியல் நிலைமைகளில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றன. எனவே அரசியல் தலைவர்களாக உள்ளோர் அரசியலில் நாகரிகமும் பொது வாழ்க்கையில் உண்மைத் தன்மையும் கொண்டவர்களாக விளங்குதல் கட்டாயமாகின்றது. இதை விடுத்து மக்கள் பிரதிநிதிகள் என்று பெருமை கொள்வதில் எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை.

இதனால் தான் எந்தவிதமான அரசுப் பதவிகளையும் வகிக்காத மகாத்மா காந்தியடிகள் கூட அரசியல் பற்றி பின்வருமாறு கூறுகிறார். "அரசியலில் நான் பங்கெடுத்துக் கொள்வதாகத் தோன்றுகின்றதென்றால், அதற்கான காரணம் இன்று அரசியல் ஒரு பாம்பைப் போல் நம்மைச் சுற்றிக் கொண்டிருக்கிறது. எவ்வளவுதான் ஒருவன் முயன்றாலும் அதிலிருந்து விடுபட முடியவில்லை. எனவே நான் பாம்புடன் போராட விரும்புகின்றேன்".

அண்ணல் காந்திஜி மக்கள் சக்தியை சுதந்திரப் போராட்டத்திற்காகக் கட்டியெழுப்பினார். இனவெறிக்கெதிரான போராட்டத்தில் இந்திய மக்களைத் தயார்படுத்தினர். ஒத்துழையாமை, சத்தியாக்கிரகம், உணவு மறுப்பு போன்ற அஹிம்சைப் போர் முறைகளூடாக விடுதலைத் தீயை எரியச் செய்தார். காந்திஜி கட்டியெழுப்பிய மக்கள் சக்தி பேரரசுகளையே பேரிடிக்குள்ளாக்கியது. இதனால் உலக மக்கள் மனங்களில் என்றும் நீங்காது நிலைத்து நிற்கின்ற அழியா வாழ்வைப் பெற்றார். நாமும் நாட்டுப் பற்றையும், சுதேசி மனப்பான்மையையும் எங்கள் உள்ளங்களில் வளர்த்துக் கொள்வதோடு, அன்னாரின் 139 ஆவது ஜயந்தியைக் கொண்டாடுகின்ற இவ்வேளையில் மனித மதிப்பை மீண்டும் உன்னத நிலைக்கு உயர்த்துவதற்கு எம்மாலான ஒத்துழைப்பை சமுதாயத்திற்கு வழங்குவதே நாம் மகாத்மாவிற்கு செய்யும் மிகப் பெரிய கடமையாக இருக்க முடியும்.

**எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி**

## 'ஈழத்துக் காந்தி'

### சா.யே.வே.செல்வநாயகம்



கருத்து வேறுபட்டவர்களும் மதிக்கும் ஒரு தலைவனின் மறைவு தாங்கமுடியாத பேரிழப்பு . தற்பெருமை, தற்புகழ்ச்சி, தன் ஆளுமை போன்றவற்றை நிலை நாட்டுவதற்காக தன்னலம் மிக்க தலைவர்கள் தான்தோன்றித் தனமாய் தோன்றிக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில் தனிமர வளர்ச்சியைக் காட்டத் தோப்பு வளர்ச்சியையே துண்டிக்கும் துரோகிகள் இடையில், துருவ மீன் போல் தோன்றித் திசை காட்டிய தலைமையை மறைக்கவோ, மறுக்கவோ, மறக்கவோ மக்களால் முடியுமா?

தனக்குப் பின் தன் வழிச் செல்லத் தனயர்களைப் பயிற்றாத தந்தையை குறிக்கோள் கொண்ட குடும்பத் தலைவனாகக் கொள்ள முடியாது. தந்தையின் மரணப்படுக்கையிலோ, மரணத்தின் பின்போ கருத்துக்கள் வேறுபட்டாலும் குடும்பக் கட்டுக்கோப்பைக் குலைக்காமல் இணைந்து வாழும் குடும்பமே போற்றத்தக்கது.

கடவுளை எங்கும் எதிலும் காணலாம் அல்லவா? அதே போன்று காந்தியார் விரும்பிய குணநலங்களை தங்களை விடத் தங்கள் தலைவரில் நிறைந்து காண்பதைக் கண்டு "ஈழத்துக்காந்தி" என அழைத்து மகிழ்ந்தனர் மக்கள். காந்தி அடிகளார் "மகாத்மா" பட்டத்தால் நிலை தடுமாறவில்லை. அதே போன்று திரு.சா.யே.வே.யும் தமக்களிக்கப்பட்ட "தந்தைப்பட்டத்திலோ", "ஈழத்துக்காந்தி" பட்டத்திலோ நிலை தடுமாறவில்லை.

நேர்மை, வாய்மை, எளிமை, இன்னாசெய்யாமை, அமைதி அவர் கடைப்பிடித்த கைக்கொள்ள விரும்பிய வாழ்க்கை வழி. தம்மால் பின்பற்ற முடியாத கொள்கைகளையோ, வழிகளையோ மிகைப்படபேசி அவர் எவரையும் ஏமாற்றவில்லை. தம்மால் ஏற்றுக் கொள்ளக்கூடிய, கடைப்பிடிக்க முடிந்த கொள்கைகளையும்,நெறிமுறைகளையும் கடைப்பிடித்து எடுத்துக் காட்டாக இலங்கினார்.

கருத்து வேறுபாடுற்றோரையும், பகைத்துக் கொண்டோரையும் அவர் என்றும் வையவில்லை. மாறாக என்றும் தம் கருத்தை இயன்ற வழிகள் எல்லாவற்றாலும் ஒரு நல்லாசிரியனைப் போல் விளங்க வைக்க முயன்றார்.

மனிதருக்கு உடல் வலிமையல்ல உளவலிமையே மிக முக்கியம் என்று வாழ்ந்து உணர்த்தியவர் திரு.சா.யே.வே.தமிழர்களின் நலம் விழைந்த போதிலும் அவர் சிங்களவர்களைப் பகைத்துக் கொள்ளவில்லை. "வகுப்பு வாதம் பேசவில்லை" தமிழர்களே தலைசிறந்த இனத்தினர் என்று செருக்குறவோ பேசவோ இல்லை. தமிழரும், சிங்களவரும் இலங்கையில் இணைந்து வாழ்வதையே விரும்பினார். அவருக்குப் பல படித்த சிங்கள நண்பர்கள் உள்ர். இவற்றை நாம் என்றும் மறக்கக் கூடாது.

ஏகநெறி...... ஏன் மார்க்ஸ் நெறி கூட, அவர்கள் மறைவுக்குப் பின் பல்வேறுபட விளங்கிக் கொள்ளப்பட்டு வருகின்றது.

திரு.செல்வாவின் வழி, தமிழர் வழி, அதைக் கைக் கொள்வோர்:

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"
"யாதும் ஊரே யாவரும் கேளிர்"
"நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்"
"வினையே ஆடவர்க்கு உயிரே"
"எவ்வழி நல்லவர் ஆடவர்"
அவ்வழி நல்லை வாழிய நிலனே"
"தீதும் நன்றும் பிறர் தர வாரா"
"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்"
"தானே தனக்குத் தலைவனும் நட்டானும்"
என்பன போன்ற தமிழ்ச் சான்றோர்
கருத்துக்களை மறக்கக் கூடாது.

1977 ஜூன், ஜூலை காந்தியம் இதழில் அடி என்பவர் எழுதிய கட்டுரை இவ்வருடம் சா.யே.வே.செல்வநாயகம் அவர்களின் 110 வது பிறந்த நாள் நினைவாக இங்கு மறுபிரசுரம் செய்யப்படுகின்றது.

# சமூக விடுதலைக்கு காந்தீயம் ஒன்றே வழி

காந்தி மாஸ்ரர் என எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் திருகோணமலையைச் சேர்ந்த பொ.கந்தையா அவர்களை "காந்தீயம்" பத்திரிகைக்காகச் சந்திக்கச் சென்றோம். இந்த அரிய சந்திப்பு ஆகஸ்ட் 22 ம் திகதி நிகழ்ந்தது. அன்றைய தினம் கொழும்பு சின்மயாமிஷன் சுவாமி தாசன் சைதன்யர் இரண்டு நாள் பிரசாரத்திற்காக திருமலைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்கள். சுவாமிகளை காளிகோயில் கல்யாண மண்டபத்தில் தரிசித்து விட்டு வந்த காந்தி ஐயாவை அவரின் முத்துக்குமார சுவாமி கோவிலடி இல்லத்தில் சந்தித்து உரையாடினோம்.

90 வயது நிரம்பிய காந்தி ஐயா எம்முடன் உற்சாகமாகவும் கொள்கைப் பிடிப்பு தளராமலும் உரையாடினார். அன்று வெள்ளிக் கிழமையாதலால் அவர் மூன்று நேர விரதம் மேற்கொண்டிருந்தார். அதற்கு அவர் சொன்ன காரணம் இந்த நாட்டில் எத்தனை இலட்சம் மக்கள் ஒருநேர உணவின்றி கஷ்ரப்படுகிறார்கள் என்பதாகும்.

இந்தச் செவ்வியினால் மட்டும் காந்தி ஐயாவை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது. அவருடைய சமூகப்பணி பரந்து விரிந்தது.

2005ம் ஆண்டு காந்தி ஐயாவைப் பற்றிய நூல் "மகாத்மா காந்தியின் மகத்தான சீடர்" என்ற தலைப்பில் வே.வரதசுந்தரம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு மணிமேகலைப் பிரசுரமாக வெளிவந்தது. அந்நூலில் காந்தி மாஸ்டரின் சிந்தனைக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. மேலும் ஈழத்து இலக்கியச் சோலை ஸ்தாபகர் கலாபூசணம் த.சித்தி அமரசிங்கம் அவர்கள் காந்தி மாஸ்டருக்குப் பவளவிழா மலர் வெளியிட்டு அரும்பணி ஆற்றியுள்ளார். இந்நூல்களை வாசகர்கள் தேடிப் படிக்க வேண்டும் என்பது எமது அவா.

காந்தி ஐயாவின் சேவை நலத்தை நாடளாவிய ரீதியில் போற்றி, இவருக்கு "முதறிஞர்" பட்டம் கொழும்பு கம்பன் விழாவில் வைத்து வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான பல சிறப்புக்கள் நிறைந்த அரிய மனிதருடன் உரையாடிய விடயங்களின் சுருக்கத்தை "காந்தீயம்" வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.


**? தங்களைப் பற்றிய சிறு அறிமுகம்...**

★ யாழ்ப்பாணம் மாதகலில் 19.12.1918 இல் பிறந்த நான் அமெரிக்க மிஷன் பாடசாலை, மாதகல் கிழக்கு விக்னேஸ்வரா, பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலை, மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகியவற்றில் பயின்று ஆசிரிய தராதரப்பத்திரம் சித்தியடைந்தேன். மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலைக் காலத்தில் க.பொ.இரத்தினம் அவர்களையும் மறக்க முடியாது.

பின்னர் அரச பாடசாலைகளில் 10 வருடமும் உதவி நன்கொடை பெறும் இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளில் 15 வருடமும் ஆசிரியராகப் பணியாற்றினேன்.

1953 இல் திருகோணமலையில் எனது திருமணம் காந்திய சர்வோதய முறைப்படி நடைபெற்றது. பண்டிதர் க.பொ.இரத்தினம் அவர்கள் தலைமை தாங்கினார். பிராமணர் கிரிஜை செய்யவில்லை. மந்திரங்களுக்குப் பதிலாக திருமுறைகள் ஓதப்பட்டன. ஆத்மஜோதி ஆசிரியர் நா.முத்தையா அவர்கள் திருமுறைகளை

விசேட செவ்வியில் காந்தி மாஸ்டர்



ஓதினார். தலைமை உரையை அச்சடித்துக் கொடுத்தோம். பாடசாலைகளுக்கு மகாத்மா காந்தியின் பிரார்த்தனை, படங்கள், புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டன. நானும் மனைவியும் கதர் உடுத்து (கதர் வேட்டி, கதர் சேலை) திருமணம் செய்தோம். தேனீர், கோப்பிக்குப் பதிலாக தோடம்பழ இரசம் பருகக் கொடுக்கப்பட்டது. இரவு பஜனை இசைக்கச்சேரி என்பன நடைபெற்றன.

**? மகாத்மா காந்தியின் கொள்கைகளினால் தாங்கள் கவரப்பட்ட விதம் குறித்து..........**

★ நான் 15 வயதில் எஸ்.எஸ்.சி.படித்துக் கொண்டிருந்த போது எனது நண்பர் பெருமைனார் "சத்திய சோதனை" ஒன்றைக் கொண்டு வந்து என்னிடம் தந்தார். அதனை நான் படித்த பொழுது காந்திஜியின் கொள்கைகளினால் கவரப்பட்டேன். அன்றிலிருந்து கதர் உடுத்தத் தொடங்கினேன். எனது 5 வயதில் அரிவரி படிக்கையில் ஒரு ஐயா பிரசங்கத்தின் போது நீங்கள் சைவப்பிள்ளைகள் மாமிசம் புசிக்கக்கூடாது என்று போதித்தார். அன்றைய தினம் நான் எனது தாயாரிடம் சென்று நான் சைவ போசனத்திற்கு மாறும் விருப்பத்தைத் தெரிவித்ததுடன் குடும்பத்தையும் சைவ உணவு முறைக்கு மாற்றினேன்.

1947ல் கொக்குவில் இராமகிருஷ்ண சங்க வித்தியாலயத்திற்கு கற்பிக்கச் சென்ற போது காந்தி வேலாயுதபிள்ளை, ஹண்டி பேரின்பநாயகம் ஆகியோரின் தொடர்பினால் தீவிர காந்தீயத்தில் ஈடுபடலானேன்.

**? அகில இலங்கை காந்தி சேவா சங்கத்துடனான தங்களின் தொடர்புகள் சேவைகள் பற்றி.............**

★ அகில இலங்கை காந்தி சேவா சங்கத்துடன் ஏற்பட்ட தொடர்பினால் வித்துவான் கனகசபை, பண்டிதர் ஆறுமுகம், காந்தி வேலாயுதபிள்ளை, வித்துவான் சிவபாதசுந்தரம், புங்குடுதீவு வித்துவான் பொன் கனகசபை, நீர்வேலி பண்டிதர் துரைசிங்கம், பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், ஹண்டி பேரின்பநாயகம், பேராசிரியர் நேசையா, முதலியார் செ.சின்னத்தம்பி (வட்டுக்கோட்டை), புரோக்டர் நாகலிங்கம் (வட்டுக்கோட்டை), பண்டிதர் சரவணமுத்து (கொக்குவில்)

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

ஆகிய பெரியோர்களுடன் இணைந்து காந்தி சேவா பணியில் ஆத்ம திருப்தியுடன் ஈடுபட்டேன்.

உருத்திரபுரத்தில் காந்தி வேலாயுத பிள்ளையுடன் இணைந்து பணியாற்றினோம். காந்தி வேலாயுதபிள்ளை குன்றக்குடி அடிகளாரின் ஒரு உன்னதமான சீடன், வேலாயுதப்பிள்ளையின் மடியில் எப்பொழுதும் குன்றக்குடி அடிகளாரின் விபூதி இருக்கும். அப்பொழுது சர்வோதய இயக்கத்துடன் இணைந்து காந்தி சேவா சங்கம் வேலை செய்தது. நீர்வேலி-கைதடி வீதி ஒருவார கால சிரமதான இயக்கத்தில் 300 தமிழ்-சிங்களத் தொண்டர்கள் இணைந்து வேலை செய்தோம். தமிழ் தொண்டர்கள் குருநாகல்-குளியாப்பிட்டி கிராமத்தில் போய் வயலில் வேலை செய்தோம். இன்று சர்வோதயம் முழுக்க முழுக்க காந்திய கொள்கைகளைக் கொண்டு நடக்கவில்லை.

? **திருகோணமலையில் தாங்கள் மேற்கொண்ட காந்தி சேவா செயற்பாடுகள் பற்றி.......**

* திருமலையில் காந்திய நூல்கள், காந்திய இலக்கியங்களைப் பரப்பும் பணியில் ஈடுபட்டேன். சிரமதான இயக்கத்திற்கென்று ஒரு சபையை உருவாக்கி (நாகராசா என்பவர் செயலாளராக இருந்தார்) சுடலை துப்புரவு மற்றும் சிரமதான இயக்கங்களில் பங்குபற்றினோம். திருமலை முற்றவெளியில் காந்தி சிலை அமைக்கப்பட்டது. தற்போது அது உடைக்கப்பட்டுள்ளது. வேறு ஒரு விடயம் நான் மாதகலில் இருந்த வேளை மாதகல் நுணசை முருகமூர்த்தி கோயிலுக்குள் ஹரிஜனங்கள் (சமூகத்தால் தாழ்த்தப்பட்ட மக்கள் என்ற முத்திரை குத்தப்பட்டு ஒதுக்கப்பட்டோர்) செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஹரிஜனங்கள் போகாத கோவிலுக்குள் நானும் போவதில்லை என்று தீர்மானித்து வெளியில் நின்றேன். இச்செயலுக்கு எனக்கு வழிகாட்டியாக இருந்தவர் முதலியார் சின்னத்தம்பி இவரும் ஆலய வெளிநடப்புச் செய்தார்.

? **இலங்கையில் காந்தி சேவா அமைப்புகளின் செயற்பாடுகள் குறித்து............**

* இலங்கையில் அகில இலங்கை காந்தி சேவா சங்கம் இயன்றளவும் செயற்பட்டு வருகிறது. காந்தியக் கல்வி, சர்வோதயக் கருத்துப் பரப்பல், பத்திரிகை வெளியீடு, நூலகம் என்பவற்றின் ஊடாக காந்தீயத்தைப் பரப்பி வருகின்றது. சங்கத்தின் தற்போதைய தலைவர் சோ.க.தம்பிப்பிள்ளை அவர்கள் கொழும்புக் கிளைச்சங்கம் ஊடாக ஆற்றிய பணிகளை நாம் அறிவோம்.

? **இலங்கையில் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மட்டங்களில் காந்திய நோக்கிலான கல்வித் திட்டங்களுக்கு உள்ள வரவேற்பு...**



Caption: இடமிருந்து வலமாக: அகில இலங்கை காந்திசேவா சங்க நிர்வாக சபை உறுப்பினர் தி.உதயசூரியன், காந்தி மாஸ்ரர், "காந்தீயம்" பத்திரிகை ஆசிரியர், மற்றும் சமூக ஆர்வலர் T.சுதன் ஆகியோர்.

* இலங்கைப் பல்கலைக்கழகங்களில் காந்தியக் கொள்கை எடுபட்டிருந்தால் பகிடிவதை என்ற ஈனமான செயல் நடைபெறுமா? காந்தியம் புகுந்து விட்டது என்று கூறமாட்டேன்.

? **இந்திய நாட்டில் காந்திய சிந்தனை வளர்ச்சியும் அதனால் இலங்கையில் ஏற்பட்ட தாக்கங்களும் பற்றி.....**

* காந்திய சிந்தனை உலகளாவிய ரீதியில் வளர்ந்து வருகிறது. இலங்கையிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சிப் போக்கு காணப்படுகின்றது. இதற்கு இந்தியாவின் தாக்கம் நிச்சயமாக உண்டு. நான் ஒன்று சொல்வேன். நல்ல குழுக்கள் ஒருபோதும் ஒன்றாகச் சேர்வதில்லை. காந்தியக் கொள்கை நல்லது. அதை வாழ்வில் நடைமுறைப்படுத்துவது கடினம் என்று கூறுகிறார்கள். காந்தியக் கொள்கையைத் தீவிரமாகப் பேசுவதற்கு ஆள் இல்லை. அதற்கான ஈடுபாடும் பெரிதாக இல்லை. ஆன்மீக சமயத் துறைகளில் மக்கள் ஈடுபடுகிறார்களே ஒழிய சிரமதானம் போன்ற நற்காரியங்களில் ஈடுபாடு காட்டுகிறார்கள் இல்லை. காந்திய இயக்கத்தைப் பரப்ப வேண்டும் என்ற ஆர்வம் மக்களிடம் இல்லாது போகின்றமை துரதிஷ்டமே. இந்த நிலையில் "காந்தீயம்" பத்திரிகை செய்கின்ற பணி அளப்பரியது. இதற்கு காந்தீய அபிமானிகளும் மக்களும் தம்மாலான இயன்ற உதவியை வழங்க முன்வர வேண்டும்.

? **இறுதியாக சமூகத்தை சீரழிவுக் கலாசாரத்திலிருந்து மீட்பது குறித்து.......**

* இதற்கு காந்திய சங்கங்களே சிறந்த வழி என்பேன். ஒவ்வொரு கிராமத்திலும் காந்திய சங்கங்களை நிறுவி, அங்கத்தவர்களை இணைத்து காந்தி நூல்களைப் படிக்க வைத்து ஒரு அமைப்பு முறையை வளர்க்கலாம். மேலும் ஊடகங்களும் சமூக விரோதக் கருத்துக்களை பண்பாட்டுக்கு முரணான விடயங்களைத் தவிர்த்து நற்சிந்தனைகளைச் சொல்லி சமூகத்தை நற்பாதையில் செலுத்த முடியும் .

வணக்கம்.

நேர்காணலும் வடிவமும்
**ஷாந்தன் சத்தியகீர்த்தி**

படங்கள் :லலிதா போட்டோ
திருகோணமலை.

## அன்பர் தபால்

காந்தி சேவா சங்கத்திற்கு 60 ஆண்டுகள் முடிந்ததில் மகிழ்ச்சி. காந்தீயத்தை மீண்டும்தொடங்கி முறையாக நடத்த விருப்பம். ஆனால் இலங்கை நிலைமை இடம் தரும் என நம்ப முடியாது. உண்மை, அகிம்சை, எளிமை வாழ்வால் எல்லா மக்களும் சீராகச் சிறப்பாக வாழமுடியும் என்பதில் எனக்கு முழுநம்பிக்கை. இதைப் பரப்ப பயிற்சி பெற்ற காந்தீய ஊழியர்கள் அவசியம் தேவை. ஒரு ஏக்கர் நிலம் என்ற அடிப்படையில் போதிய பொருளாதாரம் உருவாகலாம் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு.

**ச.அ.டேவிட்**
சென்னை.

# இலங்கைத் தீவுக்கோர் காந்தியப் பாலம்

**(சென்ற இதழ் தொடர்ச்சி)**

-மு.மாரியப்பன்

இதற்கெல்லாம் மேலாக புத்த மதத்தையும் இந்து மதத்தையும் ஒப்புநோக்கி காந்தியடிகள் ஆற்றிய சொற்பொழிவு ஒன்றாகும். முக்கியத்துவம் வாய்ந்த இச்சொற்பொழிவானது கல்கத்தா நகரில் புத்தர் கோவிலைத் திறந்து வைத்து காந்தியடிகள் ஆற்றிய சொற்பொழிவாகும். அதில் காந்தியடிகள் "என்னுடைய மூத்த மகன் ஹரிலால் காந்தி என்னை, புத்தரை பின்பற்றுபவராக நான் மாறிவிட்டேன் என்று குற்றம் சாட்டினார். நமது சகோதர ஹிந்துக்களின் பலர் தொன்மையான இந்து மதம் என்ற போர்வையில் புத்தர் செய்திகளைப் பரப்பி வருகின்றேன் என்ற குற்றச்சாட்டையும் என்மீது சாட்டுகின்றனர். இச்சமயத்தில் நான் புத்தமதத்தை பின்பற்றுபவன் என்ற குற்றச்சாட்டை எழுப்புகிறவர்களுக்கு நான் கூறும் பதில் என்னவென்றால் போதி மரத்தின் அடியில் ஞானம் பெற்ற அம்மாபெரும் ஞானியைப் பின்பற்றுவது குறித்து நான் பெருமையடைகிறேன் என்பதேயாகும்". கல்கத்தாவில் நடைபெற்ற அக்கூட்டத்திற்கு அனகாரிக தர்மபால அவர்கள் தலைமை ஏற்றிருந்தார். காந்தியடிகள் மேலும் பேசுகையில் என்னைப் பொறுத்தவரையில் நான் புத்தரின் போதனைகளை வழிகாட்டியாக ஏற்றுக் கொள்கிறேன்" எனக் குறிப்பிட்டிருந்தார். அதே நேரத்தில் "புத்தமதம் இந்தியாவை விட்டு வெளியேற்றப்பட்டிருக்கலாம். ஆனால் பகவான் புத்தரின் ஒப்பற்ற தியாக வாழ்க்கையையும் அவரது போதனைகளையும் இந்நாட்டிலிருந்து வெளியேற்ற முடியாது" என்று கூறினார். தலைமை தாங்கிய அனகாரிகதர்மபால அவர்கள் கண்களிலிருந்து உணர்ச்சி வசப்பட்டு கண்ணீர் வந்தது. தான் எதிர்பார்த்த அளவிற்கு புத்தரின் போதனைகளை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லையே என்று மனம் வருந்தினார். இத்தகைய உத்தம புத்தமத ஞானியான அனகாரிகதர்மபால அவர்கள் காந்தியடிகளை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்தது இயற்கையே. காந்தியடிகளின் இலங்கைப் பயணம் வெற்றிகரமாக அமைந்தது. எதிர்பார்த்த அளவிற்கு மூன்று மடங்கிற்கு மேல் ரூபாய் ஒரு லட்சத்துக்கு மேல் இலங்கை மக்கள் நன்கொடையாக அளித்தார்கள். தற்போது டாக்டர் ஆரியரத்னே தலைமையில் இயங்கும் சர்வோதய இயக்கத்தின் தலைமையகமாக இருக்கும் மொரட்டுவாவிற்கும் 23.11.1927 அன்று காந்தியடிகள் விஜயம் செய்துள்ளார். டிசுஸா என்பவர் கதர்ப் பணிக்காக நன்கொடை வழங்கினார். டிசுஸா நன்கொடையாக அளித்த இல்லத்தில் தான் சர்வோதய இயக்கத்தின் காரியாலயம் இன்னும் செயல்பட்டு வருகிறது. அந்த தெருவிற்கு டிசுஸா தெரு என்று பெயர்.

காந்தியடிகள் இலங்கைத் தீவின் கிழக்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் வாழும் தமிழர்கள் மத்தியில் நீண்ட ஒரு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். தமிழர்களின் முக்கியத் தலைவரான சேர் பொன்னம்பலம் இராமநாதன் அப்பொழுது இங்கிலாந்து சென்றிருந்தார். அவரது மனைவியார் தான் யாழ்ப்பாணப் பகுதியில் காந்தியடிகள் சுற்றுப்பயணத்திற்கு பொறுப்பேற்றிருந்தார். அக்காலகட்டத்தில் தான் காந்தியடிகள் வருகையை நினைவூட்டும் வகையில் அகில இலங்கை காந்தி சேவா சங்கம் துவக்கப்பட்டு இன்றளவும் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.

இலங்கைத் தமிழர்களுக்கும் சிங்களவருக்கும் நடக்கும் இனப்போர் உச்சகட்டத்தில் இருக்கும் இக்கால கட்டத்திலும் யாழ்ப்பாணத்திலுள்ள அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினர் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 2ஆம் தேதி காந்தியடிகள் பிறந்த தினத்தையும், காந்தியடிகள் மறைந்த ஜனவரி 30ஆம் தேதியையும் உணர்வு பூர்வமாக கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். தற்போது அதன் தலைவராக இருக்கும் எஸ்.கே.தம்பிப்பிள்ளை அவர்கள் கிட்டத்தட்ட 80 ஆண்டுகள் ஆன நிலையிலும் தலைவராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இலங்கை சர்வோதய சிரமதான இயக்கத் தலைவர் ஆச்சாரிய ஆரியரத்னே அவர்களுக்கு தம்பிப்பிள்ளை மிகவும் நெருங்கிய நண்பர். சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்புவரை சர்வோதய இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு யாழ்ப்பாணத்தில் காந்தியப் பணிகளைச் செய்து வந்துள்ளார். தற்பொழுது இலங்கையில் நடந்துவரும் வன்முறைச் சூழ்நிலை காரணமாக அவரது மகன்கள் புலம்பெயர்ந்து சென்று ஆஸ்திரேலியாவில் பணி புரிந்து வருகின்றனர். சர்வோதயம் ஆங்கிலம் மற்றும் தமிழ் இதழ்களும், கிராமராஜ்யம் இதழ்களும் யாழ்ப்பாண காந்தி சேவா சங்கத்திற்கு தொடர்ந்து அனுப்பப்பட்டு வருகிறது. அச்சங்கத்தின் சார்பில் சந்தா செலுத்தி இதழ்களை பெற்றுக் கொள்கின்றனர். இவ்விதழ்களைப் படித்துவிட்டு தம்பிப்பிள்ளை தனது கடிதத்தில் "சர்வோதயம் மற்றும் கிராமராஜ்யம் இதழ்கள் போன்று இலங்கையில் வார மற்றும் மாத பத்திரிகைகள் வெளிவந்தால் தற்போது நிலவிவரும் வன்முறைச் சூழல்மாறி அமைதிச் சூழல் ஏற்படுவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது" எனக் குறிப்பிட்டுள்ளார். இலங்கை காந்தி சேவா சங்கத்தின் சார்பில் ஒரு நூலகமும் இயங்கி வருகிறது. அந்நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்குவதற்கு தமிழில் காந்தியடிகளின் நூல்கள் 20 தொகுதிகளை எங்களுடன் எடுத்துச் சென்றிருந்தோம். ஏற்கனவே டாக்டர் ஆரியரத்னே அவர்களுக்கு அளிப்பதற்காக 20 தொகுதிகள் எடுத்துச் சென்றிருப்பதையும் குறிப்பிட்டுள்ளேன். எல்லாமாகச் சேர்த்து சுமார் 40 தொகுதிகள் எடுத்துச் சென்றதில் விமானத்தில் அனுமதிக்கப்பட்ட எடைக்கு மேல் சுமார் 30 கிலோ எடைக்கு அதிக கட்டணம் செலுத்த வேண்டிய நிலை வந்தது. திருச்சி விமான நிலையத்தில் ஸ்ரீலங்கா ஏர்லைன்ஸ் என்ற விமான கம்பெனி காந்தியடிகளின் நூல்களை நன்கொடையாக அளிக்க எடுத்துச் செல்கிறோம் என்பதை ஏற்றுக் கொண்டு அதிக கட்டணம் செலுத்தாமல் கொண்டு செல்ல அனுமதித்தனர்.


முனைவர் மு.மாரியப்பன்

பின்னர் கொழும்பு விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகள் "அன்பளிப்பாக வழங்கவதற்கு ஓரிரண்டு புத்தகங்கள் மட்டும்தான் சுங்க வரியிலிருந்து விலக்கு அளிக்க இயலும். எனவே நீங்கள் இறக்குமதி வரி கட்டவேண்டும்" என வற்புறுத்தினர். நான் அவர்களிடம் காந்தியடிகள் நூல்களை இலங்கை சர்வோதய இயக்கத்திற்கும், அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்கும் அன்பளிப்பாக அளிக்க இருக்கின்றோம் எனக் கூறியவுடன் உதவி சுங்க அதிகாரி தனது மேலதிகாரியை அழைத்து வந்தார். அவ்வதிகாரி பார்சலை பிரித்துப் பார்த்து அனைத்தும் காந்திய தமிழ் மொழிபெயர்ப்பு நூல்களாக இருப்பதுகண்டு காந்தியடிகள் கருத்துக்கள் இவ்வளவு 20 ஆயிரம் பக்கங்களுக்கு மேல் இருக்கின்றனவா என்று கூறி வியந்தார். நான் அவரிடம் ஆங்கிலத்தில் 100 தொகுதிகளாக சுமார் ஒரு லட்சம் பக்கங்களுக்கு மேல் இருப்பதை அவருக்கு எடுத்துக் கூறினேன். சுங்கத்துறை மேலதிகாரி ஒரு இஸ்லாமியர். அவர் உடனே "எங்கள் நாட்டிலுள்ள சர்வோதய இயக்கத்திற்கு காந்தியடிகள் நூல்களை அன்பளிப்பாக வழங்குவதில் எங்களுக்கு மகிழ்ச்சி" எனக்கூறி வரி ஏதும் விதிக்காமல் எடுத்துச் செல்ல அனுமதித்தார். காந்தியடிகள் பெயருக்கு இருந்த மரியாதையைக் கண்டு நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தோம்.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத் தலைவர் தம்பிப்பிள்ளை அவர்கள் எங்களை யாழ்ப்பாணத்திற்கு வருமாறு ஆஸ்திரேலியாவில் இருக்கும் அவர் மகன் மூலம் எங்களுக்கு செய்தி அனுப்பியிருந்தார். யுத்தத்தின் காரணமாக சாலை வசதி பாதிக்கப்பட்டிருப்பதால் விமானம் மூலம் யாழ்ப்பாணம் அழைத்துச் செல்லவிருப்பம் தெரிவித்திருந்தார். சூழ்நிலை கருதி நாங்கள் யாழ்ப்பாணம் செல்வதை தவிர்த்துவிட்டோம். பின்னர் ஆஸ்திரேலியாவிலுள்ள தம்பிப்பிள்ளை மகன் எங்களுக்கு கொழும்பில் தமிழர்கள் வாழும் வெள்ளவத்தையில் எங்கள் மாமனார் வீடு இருக்கிறது. அவர்கள் மொரட்டுவா வந்து தங்களை அழைத்துச் செல்வார்கள். அவர்களிடம் இந்நூல்களை கொடுத்துவிட்டால் அந்நூல்கள் யாழ்ப்பாணத்திற்கு பத்திரமாக அனுப்பி வைக்கப்படும் என செய்தி அனுப்பியிருந்தார். அதே போன்று வெள்ளவத்தை சென்று தம்பிப்பிள்ளை உறவினர் வீட்டில் இந்நூல்களை ஒப்படைத்தோம். இவ்வளவு தூரம் முயற்சி எடுத்து நூல்களை சேர்ப்பித்தமைக்கு அவர்கள் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.


**நன்றி: சர்வோதயம் மலர்கிறது**

# போர் அர்த்தமற்றது; போர் மூலம் சத்தியம் தலைதூக்காது

-புத்தபெருமான்



ரணசிங்க பிரேமதாச



கௌதம புத்தர்

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாச அவர்கள் 1986 ஆம் ஆண்டு இலங்கையின் பிரதமராக இருந்த வேளை வெளியிட்ட வெசாக் வாழ்த்து அட்டைக்காக சிங்களத்திலிருந்து தமிழுக்கு மொழி மாற்றம் செய்யப்பட்ட செய்தி இங்கே தரப்படுகிறது.

சாக்கிய-கோலிய ஆகிய இரு சேனைகளுக்கு முன்னே புத்தபெருமான் தோற்றுகிறார். "மகாநாம அவர்களே, நான் உங்களோடு பேச விரும்புகின்றேன். போர் மூலம் இப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண முடியுமென்பதை நான் உங்களிடம் அறிய விரும்புகிறேன்" என்று புத்த பெருமான் கூறினார்.

"புத்தபெருமானே கோலியர்களை வெல்வது சாக்கியர்களுக்கு இலகுவான கருமமாகும். கோலியர்களைப் பூண்டோடு அழிப்போம். அப்போது வெற்றி எமதே அவர்கள் அமைத்த அணைகட்டுகளையும் சுலுசுகளையும் நாங்கள் அழித்துவிடுவோம்."

"விஸ்வமித்திர அவர்களே, நான் உங்களோடு பேச விரும்புகிறேன். போர் மூலம் இப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண முடியுமென்பதை நான் உங்களிடம் அறிய விரும்புகிறேன்."

புத்த பெருமானே, சாக்கியர்களை வெல்வது கோலியர்களுக்கு இலகுவான கருமமாகும். சாக்கியர்களைப் பூண்டோடு அழிப்போம். அப்போது வெற்றி நமதே. நாங்கள் உரோகிணி நதியில் விரும்பிய இடங்களில் அணைக்கட்டுக்களையும் சுலுசுகளையும் அமைப்போம்.

புத்த பெருமான் பின்வருமாறு கூறினார். கேளுங்கள். நீங்கள் இருவரும் இப்போது வெற்றியடைந்திருக்கிறீர்கள். ஆனால், போர் செய்தால் சேனைகளின் பேரழிவுக்குப்பின் ஒருவருக்கு மட்டுமே வெற்றி கிடைக்கும். போர் அர்த்தமற்றது. துவேஷம், கோபம், பகை ஆகியவற்றை முன்வைத்துச் செய்யும் மனிதப் படுகொலை, மனிதாபிமானத்திற்கு அவமதிப்பாகும். இதன் மூலம் சத்தியம் தலை தூக்காது. பொய்யும் அநீதியும் தலை தூக்கும். தீர்வு காண்பதற்கு உடன்பாடு அவசியம் தேவையாகும். ஆகவே இவ்விடத்திருந்து அஞ்சனா என்னும் கிளை நதி உரோகிணி நதியோடு சேரும் இடம் வரையுள்ள ஆற்று நீரைச் சாக்கியரின் விருப்பப்படி பயன்படுத்துமாறும் இதற்கு அப்பாலுள்ள நீரை கோலியரின் விருப்பப்படி பயன்படுத்துமாறும் ஆலோசனை கூறுகிறேன். தீர்வு காணுமிடத்து எதிர்பார்த்த அனைத்தையும் பூர்த்தியாக்கிக் கொள்ள முடியாது.

ஒரு பகுதியை மனிதாபிமானத்தின் பெயரால் தியாகம் செய்ய வேண்டும். சாக்கியரும் கோலியரும் இந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டும். விஸ்வமித்திர அவர்களே, பேசுங்கள், நீங்கள் கூறுவதென்ன?

"புத்த பெருமானே, தங்களுடைய ஆலோசனையை சிரமேற் கொண்டு ஏற்றுக் கொள்கிறோம்".

"அவ்வாறெனில், மகாநாம அவர்களே, தாங்கள்"

புத்தபெருமானே, தங்களுடைய ஆலோசனையை ஏற்றுக் கொள்கிறோம். தீர்வுக்கு உடன்பாடொன்றுண்டு. இந்த உடன்பாட்டிற்கு மதிப்பு அளிக்கிறோம். புத்தபெருமானே பற்றற்ற தங்களுடைய முகத்தைப் பார்க்கும் போது போர் செய்வதோ, போர் செய்வதை எண்ணுவதோ முடியாத காரியமாகும்.

(அமாவெஸ்ஸ 105, 106 ஆவது பக்கங்கள்)

## செய்திச்சரம்

### ஆத்ம ஜோதி முத்தையா குருபூஜை

ஆத்மீக வள்ளல் ஆத்ம ஜோதி முத்தையா அவர்களின் குருபூஜை ஏழாலை ஆத்மஜோதி தியான மண்டபத்தில் செப்ரெம்பர் 8ஆந் திகதி ஏழாலை இலந்தைகட்டி ஸ்ரீபாதாள ஞான வைரவர் கோயிலில் இடம் பெற்ற பூஜையைத் தொடர்ந்து ஆரம்பமானது. சிவத்திரு.சிவசண்முகவடிவேல் தலைமையில் திருவாசகம் முற்றோதுதல் இடம்பெற்றது. ஆத்மஜோதி மண்டபப் பொருளாளர் நா.முருகையா நன்றியுரை கூறினார்.

### அபிராமி அந்தாதி ஆய்வுரை

சுழிபுரம், வழக்கம்பரை பஜனைச்சபை அபிராமி அந்தாதி 54, 58 ஆவது செய்யுள்களின் ஆய்வுரையை பிரசுரித்துள்ளது. இதற்கு புலவர் கே.சந்தானராமன் M.A.B.Lit அவர்கள் விளக்கப்பேருரை எழுதியுள்ளார். இப்பிரசுரத்தைப் பெற விரும்புவோர் யாழ்ப்பாணம் 1ம் குறுக்குத்தெரு இல 171 இல் அமைந்துள்ள அகில இலங்கை காந்திசேவா சங்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

## காந்தீயம் பொது அறிவுக் களம்

**போட்டி இல 2**

01. காந்திஜி ஆரம்பித்த சத்தியாக்கிரகத்திற்கு யார் முதன் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டார்?
02. ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 2ம் திகதியை சர்வதேச அஹிம்சை தினமாகப் பிரகடனம் செய்த அமைப்பு எது?
03. அகில இலங்கை காந்திசேவா சங்கம் எத்தனையாம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது?
04. "வைக்கம் வீரர்" என்றழைக்கப்படுபவர் யார்?
05. ஆகஸ்ட்-செப்ரெம்பர் 2008 "காந்தீயம்" இதழ் தனது முதற் பக்கத்தில் எப்பெரியாரின் புகைப்படத்தைத் தாங்கி வெளிவந்தது?
06. இந்தியாவில் ஐந்தாண்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் யார்?
07. அமைதிக்கான மகாத்மாகாந்தி விருது முதன்முறையாக எந்த ஆண்டு வழங்கப்பட்டது?
08. 'இந்திய ஷேக்ஸ்பியர்' என்று அழைக்கபடுபவர் யார்?
09. யார் முதன்முதலில் சோசலிச தத்துவங்களை வகுத்து மக்களுக்கு அறிவிக்க முற்பட்டார்?
10. 'இந்தியப் பத்திரிகை உலகின் தந்தை' என்றழைக்கப்படுபவர் யார்?

மேலுள்ள வினாக்களுக்கு விடைகளைத் தேடுங்கள். உங்கள் அறிவை வளர்ப்பதோடு பரிசில்களையும் வெல்லுங்கள். இறுதித்தினம் 15.12.2008. விடைகளை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

பொது அறிவுக்களம்
ஆசிரியர்
"காந்தீயம்"
வாணி கணனிப் பதிப்பகம்
இல-61B, 1ம் குறுக்குத்தெரு,
வவுனியா.

போட்டி இலக்கம் 1இல் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று பரிசு பெறுபவர்

**ரி.மகாராசா**
தரம் 10

இலண்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் சிறுவர் இல்லம்
மன்னார்

போட்டி இல 1 இற்கான விடைகள் அடுத்த இதழில் பிரசுரமாகும்.

(ஆ-ர்)

## சத்தியத்தின் சின்னம்

காந்தியடிகள் தமக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்த உத்தமர்களுள் ஒருவர். இவர் வடஇந்தியாவிலுள்ள குஜராத் மாநிலத்தில் போர்பந்தர் என்னும் கிராமத்தில் பிறந்தார். இவர் 1869 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இரண்டாம் திகதி பிறந்தார். பெற்றோர் இவருக்கு மோகனதாஸ் காந்தி என்று பெயரிட்டனர். காந்தி என்பது அவரது குடும்பப் பெயராகும். இவர் தனது ஆரம்பக் கல்வியை உள்ளூரிலேயே பெற்றுக்கொண்டார். பெற்றோர் இவருக்கு கஸ்தூரி பாயைத் திருமணம் செய்து வைத்தனர். அவர் இங்கிலாந்தில் பாரிஸ்டர் பட்டம் பெற்றார். அவர் சிறிது காலம் இந்தியாவில் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டார். அவர் உண்மையே பேசி வந்தார். அவர் கடமைகளை கண்ணியமாகச் செய்தார். அவர் தனக்கு தீமை செய்தவருக்கும் நன்மையே செய்தார். அவர் அஹிம்சை வழியில் இந்தியாவிற்கு விடுதலை பெற்றுக்கொடுத்தார். அவர் வாழ்ந்த வாழ்க்கையை தானே சுயசரிதையாக எழுதினார். அவர் எழுதிய சுயசரிதையை 'சத்திய சோதனை' என்பார்கள்.

**ஜனனி குணசீலன்**
தரம்-5
செட்டிகுளம் ம.வி.

## ஏழைகளின் தோழன்

அமைதியின் இருப்பிடம் காந்தி
இந்தியாவை தன் நெஞ்சில் ஏந்தி
அஹிம்சையில் நீந்தி
அடைந்தார் சாந்தி.

ஆத்ம காந்தியும் நீயே
அஹிம்சை காந்தியும் நீயே
எழுந்து நின்று போராடினாய் நீயே
வெற்றியும் பெற்றாய் காந்தியே.

பலவீனமே மரணம் என்று
வாழ்ந்து காட்டிய காந்தியே
மரணம் வருவது உறுதியென்று
வாழ்ந்து காட்டிய உத்தம காந்தி

ஏழைகளிடம் இரக்கம் கொள்ளுங்கள்
என்று ஏழையாகவே வாழ்ந்த காந்தி
அச்சமே மரணம் என்று வாழ்ந்து
அஹிம்சை வழியில் வென்ற காந்தி

ஆக்கியோன்:
**ரா.கார்த்தீபன்**
சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி மன்னார்

இப்பத்திரிகை 171, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிக்கும் திரு. சோ.க.தம்பிப்பிள்ளை அவர்களால் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக வவுனியா 1ஆம் குறுக்குத்தெரு, இலக்கம் 61-B, இல் அமைந்துள்ள வாணி கணினிப் பதிப்பகத்தில் 2008ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இதழாசிரியர்: எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி